# மெட்ரோ ரயில் பயணியருக்கு வேன் வசதி அறிமுகம்

**சென்னை, அக். 2–**

மெட்ரோ ரயில் பயணியருக்கு, ஆலந்துாரில் இருந்து, வேன் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில், மெட்ரோ ரயில் போக்குவரத்தில், பயணியர் வருகையை அதிகரிக்க, நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை அமல்படுத்தி வருகிறது.

மெட்ரோ ரயில் நிலையங்களில், முன்வைப்பு தொகை திட்டத்தில், சைக்கிள் வசதி, ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

குறைந்த கட்டணத்தில், ஷேர் ஆட்டோ, ஷேர் கார், மினி பஸ் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது, ஆலந்துார் ரயில் நிலையத்தில் இருந்து, அருகில் உள்ள, ஐ.டி., தொழில்நுட்ப நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்களுக்கு சென்று வர வசதியாக, வேன் வசதி, நேற்று முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வசதியை, மெட்ரோ ரயில் இயக்கப் பிரிவு இயக்குனர், நரசிம் பிரசாத் கொடியசைத்து துவங்கி வைத்தார்.

'பர்கலேஸ்' நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, உமா கிருஷ்ணன் உட்பட, மெட்ரோ ரயில் அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

ஆலந்துாரில் இருந்து, டி.எல்.எப்., சைபர் சிட்டி, ஐ.டி., பூங்காவுக்கு செல்லலாம். காலை, 6:30 மணியில் இருந்து, இரவு, 9:30 மணி வரை வேன் வசதி செய்யப்பட்டுள்ளது. நபருக்கு, 20 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




■ மெட்ரோ ரயில் நிலையத்தில், வேன் வசதி நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. இடம்: ஆலந்துார்.